## பயிர்ப் பாதுகாப்பு

### அ. பூச்சி மேலாண்மை

| பூச்சிகள் | மேலாண்மை முறைகள் |
|---|---|
| குருத்து ஈ | ▪ விதைப்புக்குமுன்பு விதை நேர்த்தி செய்த விதையினைப் பயன்படுத்தவும் (பார்க்க சோளம்).<br>▪ இமிடாக்குளோப்ரிட் 70 டபுள்யு. எஸ். 10 கி. என்ற அளவில் ஒரு கிலோ விதையுடன் கலந்து விதைக்கவும்<br>▪ அறுவடை செய்தவுடன் நிலத்தை உழவேண்டும் மற்றும் பயிரின் தண்டுகளைச் சேகரித்து அழிக்கவும்<br>▪ ஒரு எக்டருக்கு 12 த.நா.வே.ப. குறைந்த விலை கருவாட்டுப் பொறியை வைக்கவேண்டும். இப்பொறியைப் பயிரின் வயது 30 நாள் ஆகும் வரை வயலில் வைத்து ஈக்களைக் கவர்ந்து அழிக்கவும்.<br>▪ கீழ்க்கண்ட பூச்சிக்கொல்லி மருந்துகளில் ஏதேனும் ஒன்றினை எக்டருக்கு 500 லி. தண்ணீரில் கலந்துத் தெளிக்கவும்.<br>என்டோசல்பான் 35 இ.சி. 500 மி.லி.<br>மீதைல் டெமட்டான் 25 இ.சி. 500 மி.லி |

வேப்பங்கொட்டைச் சாறு கரைசல் 5 சதம்

அசாடிரக்டின் 1 சதம்

போரேட் 10 சதம் குருணை மருந்தை எக்டருக்கு 40 கிலோ என்ற அளவில் விதைக்கும் தருணத்தில் மண்ணில் இடவும்

**தண்டுத்துளைப்பான்** கீழ்க்கண்ட குருணைப் பூச்சிக்கொல்லி மருந்துகளில் ஏதேனும் ஒன்றினை மணலுடன் கலந்து ஒரு எக்டருக்கு 50 கிலோ அளவுக்கு மாற்றிக் கொள்ள வேண்டும். இதனை விதைத்ததிலிருந்து 20 நாள் வயதுடைய பயிர்களின் குருத்தில் இடவேண்டும்

குயினால்பாஸ் 5 சத குருணை 15 கிலோ

கார்பரில் 4 சத குருணை 20 கிலோ

- குருணை பூச்சிக்கொல்லியை பயன்படுத்தாவிடில் குயினால்பாஸ் 25 இ.சி. 1 லி. அல்லது கார்பரில் 50 நனையும் தூள் 1 கிலோ 20 வது நாளில் தெளிக்கவும்.

**கதிர்ப்புழு** எக்டருக்கு கார்பரில் 10 சதத் தூள் 25 கிலோ (அ) கார்பரில் நனையும் தூள் 1 கிலோ பயன்படுத்தவும்.